# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1767/27 - 2012 ජූලි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.07.19

*1767/27 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

*2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, ஊவா மாகாணத்தின் நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் ஆலோசனை பணியக நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011,ஏப்பிறல் மாதம் 5 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2012, யூன் மாதம் 18 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*டபிள்யு. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா,*
*செயலாளர்,*
*ஊவா மாகாணத்தின் மாகாண சபை.*

*சபை செயலகம்,*
*ஊவா மாகாணத்தின் மாகாண சபை,*
*இராஜ வீதி,*
*பதுளை,*
*2012, யூலை 4.*

**2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் ஆலோசனை பணியக நியதிச் சட்டம்**

*ஊவா மாகாண உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பரவலான அதிகாரங்களுடன் கூடிய பணியகமொன்றை ஸ்தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அப்பணியகத்தின் அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றை உறுதி செய்வதற்காகவும், அத்துடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளையக்கூடிய ஏற்பாடுகளுக்கான நியதிச் சட்டமாகும்.* *பூர்வாங்கம்.*

*ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.*

*1. இந் நியதிச் சட்டத்தை 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, ஊவா மாகாணத்தின் நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் ஆலோசகர் பணியகத்தின் நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன் ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் விதிக்கப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.* *சுருக்கப் பெயர் மற்றும் அமுலாகும் திகதி.*

## I ஆம் பகுதி

ஊவா மாகாணத்தின் நிர்மாணத்துறை மற்றும் பொறியியலாளர் ஆலோசகர் பணியகத்தை நிறுவுதலும் அதன் அமைப்பும் .

2. (1) இதில் இனிவரும் காலங்களில் "பணியகம்" என அழைக்கப்படுவதோடு, ஊவா மாகாணத்தின் நிர்மாணத்தின் நிர்மாணத்துறை மற்றும் பொறியியலாளர் ஆலோசனை பணியகம் இத்தால் தாபிக்கப்படும்.

(2) ஊவா மாகாண நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் ஆலோசனை பணியகமானது கூட்டுத்தாபனமொன்றாக வேண்டியதோடு, அதற்கென உறுதியான நடைமுறையும், பொது முத்திரையொன்றும் இருத்தல் வேண்டும். மேலும் அப்பெயரால் வழக்கு தொடர்வதற்கான வாய்ப்பும் உண்டு.

(3) இதன் பின்னர் "அமைச்சர்" என்று அழைக்கப்படுகின்ற ஊவா மாகாண சபையின் நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, இப் பணியகத்தின் கீழ் கிளை அலுவலகங்கள் பிரிவுகள் அல்லது அலகுகளை வழி நடாத்திச் செல்ல முடியும்.

பணியகத்தின் நோக்கங்கள்.

3. இப் பணியகத்தை கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களுக்காக தாபித்தல் வேண்டும்.

(1) ஊவா மாகாணத்தின் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் பங்களிப்பு செய்தல்.

(2) மாகாணத்தைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு தேவையான மனித வளங்கள் பௌதீக மற்றும் ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்ளல்.

(3) மாகாணத்திற்குள்ளேயும், வெளியிலும் செயற்பட்டு மாகாண சபைக்கான வருமானத்தை பெற்றுக்கொள்ளல்.

(4) மாகாணத்தில் தொழில் வாய்ப்புகளை உற்பத்தி செய்வதில் பங்களிப்பு செய்தல்.

(5) மாகாணத்திற்குள் பொறியியல் பணிகளுக்கு தேவையான மனித வளங்கள், பௌதிகவளங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொடுக்கின்ற நிலையமொன்றை நடைமுறைப்படுத்தல்.

4. (1) பணியகத்திற்கென ஏழு நபர்களை கொண்ட குழுவொன்றை நியமிக்க வேண்டியதோடு அது கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருத்தல் வேண்டும்.

பணிய நிர்வாக குழுவும் அதன் அங்கத்தவர்களும்.

(அ) நிர்வாக, கணக்குகள் தொடர்பான விவகாரங்கள், பொறியியல், விஞ்ஞானம், போன்ற விடயங்களில் ஒன்று அல்லது சிலவற்றுக்கள் தொடர்பான அனுபவத்தையும் திறமைகளையும், நிபுணத்துவத்தையும் வெளிக்கொணர்ந்துள்ளார் என அமைச்சர் அவர்கள் திருப்பதியடையக்கூடிய நபர்கள் (இனி வருங்காலங்களில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்ற) மூவரை அமைச்சர் அவர்களால் தெரிவு செய்தல் வேண்டும். அம் மூவரை தவிர.

(ஆ) ஊவா மாகாண சபையின் கட்டிட நிர்மாணத்துறை வீதிகள், நீர்ப்பாசனத்துறை மற்றும் நிதி பிரிவுகளில் சேவையாற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள உயரதிகாரிகள் (இதில் இனி வருங்காலங்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்கள் என அழைக்கப்படும்) நால்வரும் அமைச்சர் அவர்களினால் நிர்வாக குழு அங்கத்தவர்களாக பெயரிடுதல் வேண்டும்.

நிர்வாக குழு தலைவர்.

(2) நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து ஒருவர் நிர்வாகக் குழு தலைவராக கௌரவ அமைச்சர் அவர்களால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

(3) மாகாண உள்ளூராட்சி நிறுவனமொன்றின் உறுப்பினர் அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந் நிர்வாக குழுவின் அங்கத்தவராக

நியமனம் செய்யப்படவோ, அல்லது பெயரிடப்படவோ கூடாது. தெரிவு செய்யப்பட்ட அல்லது பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் அந்நிர்வாக குழுவில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் மாகாண உள்ளூராட்சி மன்றமொன்றில், மாகாண சபையில் அல்லது பாராளுமன்ற பிரதிநிதியொருவராக தெரிவு செய்யப்பட்டால் தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் அவ் அங்கத்தவர் தொடர்ந்தும் இந்நிர்வாக குழுவில் அங்கம் வகிப்பதற்கு தகுதியற்றவராவார்.

(4) எவரேனும் ஒருவரை நிர்வாக குழு அங்கத்தவராக தெரிவு செய்வதற்கு முன்பு குழு அங்கத்தவராக அந் நபரினால் அவருடைய கடமைகளை நிறைவேற்றும் போது அவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு உள்ள நிதி மற்றும் ஏனைய தொடர்புகள் அந்நபருக்கு இல்லை என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் திருப்தியடைய வேண்டும். நிர்வாக குழுவில் எந்த ஒரு அங்கத்தவருக்கும் அத்தகைய தொடர்புகள் இல்லையென அமைச்சர் அவர்கள் திருப்தியடைய வேண்டும். இவ் உப பிரிவின் கீழ் தனது கடமைகளை தன்னாலேயே நிறைவேற்றப்பட வேண்டும் என அமைச்சர் அவர்கள் கருதுகின்ற விடயங்களை தன்னிடம் பெற்றுத் தருமாறு கோரப்படும் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அத்தகவல்களை நிர்வாக குழு அங்கத்தவராக அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட நபரொருவர் அல்லது அந் நிர்வாக குழுவில் அங்கத்தவராக தெரிவு செய்வதற்கு கருதப்படுகின்ற ஒருவர் அமைச்சர் அவர்களிடம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(5) நிர்வாக குழுவின் எவரேனும் ஒரு அங்கத்தவர் பணியகத்தினால் ஏற்படுத்திக்கொண்ட அல்லது ஏற்படுத்திக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் பற்றி, நேரடியாக அல்லது வேறு வகையில் ஏதேனும் தொடர்பு உள்ளதாக தெரிய வருமாயின் அவ் அங்கத்தவரை நிர்வாக குழுவில் இருந்து அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிடப்படும் (8) ஆம் உப பிரிவிற்கமைய மேற்கொள்ள வேண்டும்.

(6) நிர்வாக குழுவிற்கு நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு அங்கத்தவரும், நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் அவர் நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களால் தீர்மானிக்கப்படும் மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு (8) ஆம் , (9) ஆம் உப பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் பதவிவகிக்க வேண்டியதோடு, (8) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் பதவி விலக்கப்பட்டால் அன்றி மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவராக கருதப்படக்கூடாது. மேலும், நியமிக்கப்பட்ட ஒருவரது வெற்றிடத்தை நிரப்புவதற்காக நியமிக்கப்படும் மற்றுமொரு நியமன உறுப்பினரின் பதவிக்காலம் ஏற்கெனவே முடிவுற்றிருந்தாலன்றி, அவருக்கு முன்பதாக பதவியிலிருந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் எஞ்சியிருந்த காலத்துக்காக மாத்திரமே பதவி வகிக்க வேண்டும்.

(7) (9) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் தலைவரின் பதவிக் காலம், நிர்வாக சபையில் அவர் அங்கத்துவம் வகிக்கும் கால எல்லைவரை மட்டுப்படுத்தப்படும்.

(8) நியமிக்கப்பட்ட யாரேனுமொரு அங்கத்தவர் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் விளம்பரத்தின் மூலம் எந்தவொரு காரணத்தையும் காட்டாமல் பதவியில் இருந்து நீக்கப்பட முடியும். அத்தோடு நீக்கப்படல் சம்பந்தமாக எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது.

(9) நிர்வாக குழுவின் அங்கத்தவர் சம்பந்தமாக அமைச்சரினால் (8) ஆம் உபபிரிவின் கீழ் யாதாயினும் விதிக்கப்பட்டிருந்தால் விதிக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியில் அவ் அங்கத்தவரின் பதவிக்காலம் நிறைவடைய வேண்டும்.

(10) வாபஸ் சம்பந்தமாக அமைச்சருக்கு கடிதம் அனுப்புதல் ஊடாக நிர்வாக குழுவில் நியமிக்கப்பட்ட ஓர் அங்கத்தவராகவோ அல்லது தலைவராகவோ நியமிக்கப்பட்ட தனது பதவியில் இருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாபஸ்பெற முடியும்.

(11) நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வேறு குறைபாடு அல்லது இலங்கைக்கு வெளியில் இருத்தல் அல்லது வேறு ஏதாயினும் காரணங்களினால் அல்லது நிர்வாக குழுவின் அங்கத்தவர் தற்காலிகமாக தனது சேவையை செய்வதற்கு இயலாத போது 4 (1) ஆம் உப பிரிவின் விதிகளை கவனத்திற்கொண்டு, அமைச்சரினால் வேறு ஒருவரை அவ் அங்கத்தவருக்கு பதிலாக பதிற்கடமை செய்வதற்கு நியமிக்க இயலும்.

(12) நிர்வாக குழுவின் தலைவர் நோய்வாய்ப்படுவதனால் அல்லது வேறு குறைபாடுகளினால் அல்லது இலங்கைக்கு வெளியில் இருத்தல் அல்லது வேறு ஏதாயினும் காரணங்களினால் தமது பதவியில் சேவை செய்வதை தற்காலிகமாக இயலாத பட்சத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் வேறு அங்கத்தவர் ஒருவரை தலைவராக அலுவல்கள் மேற்கொள்வதற்காக அமைச்சரினால் நியமிக்க முடியும்.

(13) நிர்வாக குழுவின் எந்தவொரு அங்கத்தவரினது அங்கத்துவம், மரணம், ராஜினாமா செய்தல், நீக்கப்படுதல், காலம் முடிவடைதல் காரணமாக நிறைவு பெறும்.

அங்கத்தவர்களின் ஓய்வுகால கொடுப்பனவுகள்.

5. பணியகத்தின் நிர்வாக குழுவின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அமைச்சர் குழுவின் நிதி விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஓய்வுகால கொடுப்பனவு மற்றும் வேறு செலவுகள் பணியகத்தின் நிதியிலிருந்து கொடுக்க முடியும்.'

நிர்வாக குழுவின் சட்டவிதிகளும். அறிவுறுத்தல்களும்.

6. (1) நிர்வாக குழுவிற்கு தலைவர் வருகை தரும் அனைத்து நிர்வாக கூட்டங்களுக்கும் அவரே தலைமை வகிக்க வேண்டும். நிர்வாகக்குழு கூட்டத்திற்கு தலைவர் வருகைதராத சந்தர்ப்பத்தில் வருகை தந்திருக்கும் அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்படும் ஒருவர் அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டும்.

(2) நிர்வாக குழுவினால் முக்கிய தேவை என்று கருதப்படும் எச்சந்தர்ப்பத்திலும் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

(3) நிர்வாக குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் ஒருவருக்கு அவரின் வாக்கைவிட மேலதிகமாக நிர்ணய வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

(4) நிர்வாகக்குழுவின் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(5) நிர்வாக முழுவின் அங்கத்தவர்களுக்கிடையில் ஒரு வெற்றிடம் இருந்த போதிலும் நிர்வாகக் குழு செயற்பட முடியும். நிர்வாக குழுவின் அங்கத்தவர்களுக்கிடையில் வெற்றிடம் இருத்தல் அல்லது ஒரு அங்கத்தவரை நியமித்தல் அல்லது தெரிவு செய்யும் குறைபாடு இருத்தலை மட்டும் காரணமாக கொண்டு செயலோ நடவடிக்கையோ வலுவற்றது ஆகாது என்பதுடன் வலுவற்றதாக கருதப்படவும் கூடாது.

(6) (அ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்வாக குழுவின் கூட்டம் மற்றும் அக்கூட்டங்களின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல் தொடர்புள்ள நடைமுறைகளுக்கான விதிகளை நிர்வாகக் குழு தயாரிக்க இயலும் ;

(ஆ) நிர்வாக குழுவினால் அவ்வாறு தயாரிக்கப்படும் கட்டளைகள் அமைச்சரினால் அனுமதிக்கப்படும் வரை வலுப்பெற முடியாது ;

பணியகத்தின் பதவி முத்திரை.

7. (1) பணியகத்தின் அதிகார முத்திரை நிர்வாக குழுவின் தலைவரிடம் இருக்க வேண்டும்.

(2) நிர்வாக குழுவினால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கிணங்க பணியகத்தின் முத்திரை மாற்றம் செய்யப்படலாம்.

(3) நிர்வாக குழுவின் தலைவர் உட்பட நிர்வாக குழுவின் அங்கத்தவர்கள் இரண்டு பேருக்கு முன்னால் அல்லாது எந்தத் பத்திரத்திலோ, ஆவணத்திலோ பணியகத்தின் முத்திரையை பதிக்க முடியாது. அந்த அங்கத்தவர்கள் இருவரும் அவர்கள் சமுகமளித்ததற்கு அடையாளமாக அப்பத்திரங்களில் அல்லது ஆவணங்களில் கையொப்பம் இட வேண்டும்.

## II ஆம் பகுதி

### பணியகத்தின் அதிகாரம் மற்றும் கடமைகள்

8. (1) ஊவா மாகாணத்திற்குள் அல்லது அதற்கு வெளியில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல் என்ற குறிக்கோளை கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் சிவில் அல்லது இயந்திர அல்லது மின்சார அல்லது மின் மூலமான அல்லது எந்தவொரு முறையிலும் பொறியியல் தன்மை சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டம், நிகழ்ச்சித் திட்டம், கைத்தொழில்களை அல்லது வேலைகளை திட்டமிடல், மதிப்பீடு செய்தல், நடைமுறைப்படுத்தல், கொண்டு நடாத்தல், நிர்வாகத்தை முன்னேற்றம் செய்தல், மேற்பார்வை செய்தல், அதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல், அதற்கு தேவையான ஆலோசனைகளை அளித்தல் மற்றும் அப்படியான செயல் திட்டங்கள், செயலமர்வுகள் கைத்தொழில் அல்லது வேலைகள் சம்பந்தமாக தேவைப்படும் அறிக்கை தயாரித்தல் மற்றும் தேவைக்கு ஏற்ப அந்த அறிக்கையை முன் வைத்தல்.

*(2) ஒரு எழுத்துமூல சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க மேல் குறிப்பிடப்பட்டுள்ள (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டம், நிகழ்ச்சித் திட்டம் கைத்தொழில் அல்லது காரியங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவைப்படக் கூடிய ஒப்பந்தங்களுக்கு அல்லது உடன்படுதலுக்கு ஊவா மாகாணத்திற்குள் அல்லது அதற்கு வெளியில் ஒருவருடன் அமைச்சரின் முன் அனுமதியுடன் நேரடியாக அல்லது கூட்டு வியாபாரமாக உள்நுழைதல், அதை பூர்த்தி செய்து கொள்ளல் மற்றும் நடாத்தி செல்லுதல்.*

*(3) மேற்படி (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டம், கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டம் அல்லது காரியத்தை முடிப்பதற்கு முயலாது போகும் அல்லது செய்யாதுவிடும் ஒருவர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் அச் செயற்திட்டம் கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டம் அல்லது காரியத்தை செய்து முடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.*

*(4) அமைச்சரினால் அனுமதிக்கப்படும் செயற்திட்டங்கள் மற்றும் மூலதன முதலீட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*

*(5) அரசாங்கத்தில் அல்லது மாகாண சபையில் அல்லது வேறு மாகாண சபையொன்றில் அல்லது வேறு மாகாண சபைக்கு சொந்தமான நிறுவனத்தில் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த நிறுவனத்திற்காக அபிவிருத்தி செயற்திட்டம், கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டம் அல்லது செயல்களைத் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல், நடைமுறைப்படுத்தல், இணைப்பு அல்லது ஆலோசனை வழங்குதல் அல்லது வேறொரு வகையில் அதற்கு உதவி வழங்குதல்.*

*(6) இந்தப் பணியகத்திற்காக வழங்கப்படும் எந்தவொரு சேவைக்காகவும் கட்டணம் அறவிடுதல்.*

*(7) பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது உபகரணங்களாகவோகிடைக்கும் வழங்கீடுகள் ,உதவிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பணியகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அவற்றை உபயோகித்தல்.*

*(8) எந்தவொரு அசையும் அல்லது அசையா சொத்துக்களை கொள்வனவு செய்தல் அல்லது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை அகற்றுதல்.*

*(9) பணியகத்தின் காரியங்களுக்குத் தேவைப்படும் மனித பௌதிக மற்றும் வளங்களை கொள்வனவு செய்தல் அல்லது வாடகை அடிப்படையில் அல்லது குத்தகை அடிப்படையில் அல்லது வேறு வகையில் கட்டணம் செலுத்த கூடியவாறு பெற்றுக்கொள்ளல் .*

*(10) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பணியகம் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பணியகத்திற்கு தேவையான நிதி, அமைச்சர் அவர்களுடைய எழுத்துமூல அனுமதியுடன் அமைச்சர் அவர்களால் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க காசோலைகள் அல்லது வேறொரு வகையில் அரச வங்கி ஒன்றிலிருந்து அல்லது அரச அனுசரணையுடனான நிறுவனம் ஒன்றிலிருந்து கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்.*

*(11) அரசாங்கத்திற்கு அல்லது அரச அனுசரணையுடனான நிறுவனத்துக்கு அல்லது மாகாண சபைக்கு சொந்தமான காணிகளை பொறுப்பேற்பதற்கும் அக்காணிகளை அபிவிருத்தி செய்வதற்குமாக பயன்படுத்துதல்.*

*(12) பணியகத்தினால் தனத அதிகாரத்தை, காரியத்தை, கடமையை நிறைவேற்றும் போது செயற்படுத்தும் போது மற்றும் ஏதாவது அபிவிருத்தி திட்டத்தை, கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தை அல்லது கருமங்களைத் தயாரிக்கும் போது அல்லது நிறைவேற்றும் போது உத்தேச வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அல்லது மற்றொரு மாகாண சபையின் அல்லது அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது சபையின் உரிமைகள், தொடர்புகள் அல்லது காரியங்கள் மீது தாக்கம் ஏற்படின், சந்தர்ப்பத்திற்கேற்ப குறித்த நிறுவனத்தைக் கேட்டு அவற்றைத் தயாரித்தல் அல்லது நடைமுறைப்படுத்துதல் பணியகத்தின் கடப்பாடாகும்.*

*(13) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஆணித்தரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விதிமுறைகளை தயாரித்தல்.*

*(14) இந்நியதிச் சட்டத்தினால் கட்டிக்காட்டப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இடைநேர் விளையக்கூடிய அனைத்து விடயங்களை நடைமுறைப்படுத்துதல் பணியகத்தின்கூடிய அதிகாரங்களும் கடமைகளுமாகும்.*

9. பணியகத்தினால் தனது அதிகாரங்களையும், கடமைகளையும், காரியங்களையும் நிறைவேற்றும் போது, எதாவது அபிவிருத்தி திட்டத்தை, கைத்தொழிலை, நிகழ்ச்சித் திட்டத்தை அல்லது காரியங்களை அமுலாக்கம் செய்யும போது ஏதாயினும் உள்ளூராட்சி நிறுவனத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் தலையீடு தேவைப்படுமானால் பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களுக்கு அல்லது செயற்றிட்டங்களுக்கு குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் தலைவருக்கு அல்லது வேறு நிறுவனத்தின் ஓர் அதிகாரிக்கு அழைப்பு விடுத்தல் பணியகத்தின் கடமையாகும். அவ்வாறான அழைப்பை பெற்ற உள்ளூராட்சி நிறுவனத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் தலைவர் அல்லது அனுமதிபெற்ற ஓர் அதிகாரி அவ்வழைப்புக்கிணங்க குறித்த கூட்டங்களுக்கு அல்லது செயற்றிட்டங்களுக்கு சமுகமளிக்க வேண்டும்.

அமைச்சர் அவர்களின் கட்டளைகள்.

10. (1) பணியகத்தினால் அவ் அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்றல், செயற்படுத்தல் தொடர்பாக அமைச்சரினால் அவ்வப்போது பணியகத்திற்கு சாதாரண அல்லது விசேட கட்டளைகள் வழங்க முடியும் என்பதோடு, பணியகத்தினால் அக்கட்டளைகளை அதிகாரப்படுத்த வேண்டும்.

(12) பணியகத்தின் சொத்துக்கள், மற்றும் நடவடிக்கை தொடர்பாக காலாண்டு அறிக்கை, கணக்கு மற்றும் ஏனைய விவரங்களை தான் நிர்ணயிக்கும் மாதிரிப்படிவத்துக்கமைய வழங்கும்படி அமைச்சர் அவர்களினால் அவ்வப்போது கடிதமூலம் கட்டளையிட முடியும் என்பதோடு, பணியகத்தினால் அவ் அனைத்து கட்டளைகளும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பணியகத்தின் அதிகாரங்கள் போன்றவற்றை ஒப்படைத்தல்.

11. இந்நியதிச் சட்டத்தின் கீழ் பணியகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றல் செயற்படுத்தல், நடைமுறைப்படுத்தல் ஆகிய பொறுப்புகள் பணியகத்தின் நிர்வாகக் குழுவிற்கு உரித்தானதாகும். நிர்வாக குழுவினால் பணியகத்தின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் சிலவற்றை தலைவருக்கோ அல்லது எந்தவொரு உத்தியோகத்தருக்கோ கடிதமூலம் ஒப்படைக்க முடியும்.

## III ஆம் பகுதி

### பணயகத்தின் ஆளணியினர்

பணியகத்தின் தலைவர்.

12. (1) ஊவா மாகாணத்தின் பிரதம செயலாளரினால் அமைச்சரின் கடிதமூலம் பெற்ற அனுமதியுடன் பணியகத்திற்கான தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

(2) பணியகத்தின் வேலைகள் நடாத்துதல், பணியகத்தின் அதிகாரங்கள் கடமைகளை நிறைவேற்றல், நடைமுறைப்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் போது, பணியகத்தின்சேவையில் ஈடுபட்டுள்ள சேவையாளர் தொடர்பானநிர்வாகம் மற்றும் நன்னடத்தைக் கட்டுப்பாடு கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும் நிர்வாக குழுவின் சாதாரண ஏற்பாடுகளின் கீழ் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) தனது அதிகாரம், கடமைகள், காரியங்களில் எதனையாவது பணியகத்தின் வேறொரு உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வசியம் எனக் கருதினால், குறித்த அதிகாரம், கடமைகள், காரியங்களை நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் வேறொரு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க இயலும், அவ்வாறான யாதேனும் அதிகாரங்கள், கடமைகள், காரியங்கள் ஒப்படைக்கப்பட்ட யாராயினும் ஓர் உத்தியோகத்தரினால் தலைவரின் சாதாரண அல்லது விசேட சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

(4) அமைச்சர் அவர்களினால் எழுத்துமூல முன் அனுமதியின்றி தலைவர் பதவியிலிருந்து அகற்றப்பட முடியாது.

பணியக ஆளணியினரின் நியமனம்.

13. (1) பணியகத் தலைவரினால் விடயப்பொறுப்பான அமைச்சர் செயலாளரிடம் விசாரித்தறிந்து நியதிச் சட்டத்தின் வேறும் சட்ட திட்டங்களின் கீழ் –

(அ) பணியகத்தின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக நிர்வாக சபையினால் தேவையெனக் கருதப்படும் ஆளணியினர் தொகுதியை நியமித்தல், சேவை நீக்கம் செய்தல் மற்றும் ஆளணியினர் சம்பந்தமான நன்னடத்தைக் கட்டுப்பாடுகளை பேணிச் செல்லல் ;

(ஆ) அந்த ஆளணியினரின் வேதனங்கள், சம்பளம் அல்லது வேறு என்பவற்றை தீர்மானித்தல் ;

(இ) அந்த ஆளணியினரின் சேவை நியமனங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றைத் தீர்மானித்தல், மற்றும்

(ஈ) ஆளணியினரின் நலனுக்காக ஊழியர் சேமாலாப நிதி அல்லது வேறு திட்டமொன்றை உருவாக்கல் முறைப்படுத்துதல் மற்றும் அவ்வாறான ஏதாவது நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும்.

(2) யாதேனும் எழுத்துமூலமான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கோரிக்கைப்படி மாகாண சபை அரச சேவையிலுள்ள யாராயினும் ஓர் அதிகாரி அவ்வதிகாரியினதும், அவ் அதிகாரி சேவையிலீடுபட்டிருந்த அமைச்சினதும், அவ் அமைச்சின் செயலாளரினதும், விடயப்பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் விருப்பத்துடனும் நிர்வாக சபையின் விருப்பத்துடனும் தீர்மானிக்கப்படும் காலத்துக்கு பணியகத்தின் ஆளணியினரில் ஒருவராக தற்காலிகமாக நியமிக்கப்பட இயலும் அல்லது அவ் வகையான விருப்பத்துடன் ஆளணியினரில் ஒருவராக நிரந்தரமாக நியமிக்கப்பட இயலும் .

(3) குறிப்பிட்ட கால எல்லைவரை அரசாங்கத்துக்கு அல்லது மாகாண சபைக்கு சேவையாற்ற இணங்கி அரசாங்கத்துக்கு அல்லது மாகாண சபைக்கு சேவையாற்ற இணங்கி அரசாங்கம் அல்லது மாகாண சபையுடன் ஓர் ஒப்பந்தத்துக்கு உட்பட்டுள்ள யாராயினும் ஒருவர் பணியகத்தினால் சேவைக்கு அமர்த்தப்படும் சந்தர்ப்பத்தில் அந்த நபர் பணியகத்தில் சேவையாற்றும் குறித்த காலப்பகுதி குறித்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் காரியத்துக்காக அரசாங்கத்துக்கு அல்லது மாகாண சபைக்கு ஆற்றும் சேவையாகக் கருதப்பட வேண்டும்.

## IV ஆம் பகுதி

### நிதி

14. (1) பணியகத்திற்கென பணியகத்தின் பெயரால் நிதியமொன்றிருத்தல் வேண்டும். அந்நிதிய கணக்குகள் அரசு அனுசரணையுடனான வங்கியொன்றில் நடாத்திச் செல்லல் வேண்டும். பணியகத்தின் நிதியம்.

பணியக நிதியத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வகையில் நிதி செலுத்தல் வேண்டும்.

(2) (அ) பணியகத்தின் தேவைக்காக ஊவா மாகாண சபையால் அவ்வப்போது அனுமதிக்கப்படும் நிதி ;

(ஆ) தனது அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது நிறைவேற்றும் போது பணியகத்திற்கு கிடைக்கின்ற நிதி மற்றும்

(இ) பணியகத்தின் கணக்கில் வரவு வைக்கப்படும் நிதி.

(3) இந்நியதிச் சட்டத்தின் மற்றும் வேறு ஏதேனும் எழுத்துமூல சட்டத்தின் கீழ் பணியக அதிகாரங்களையும் கடமைகளையும் முகாமைத்துவம் செய்தல், பணியகப் பணிகளை நடைமுறைப்படுத்தல், நிர்வாக குழுவின் அங்கத்தவர்களுக்கும் பணியகச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குமான ஓய்வு கால கொடுப்பனவை செலுத்தல், பணியகத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல், கடமைகளை நிறைவேற்றல் தொடர்பாக ஏற்படுகின்ற செலவுகளை செலுத்துதல் போன்ற கடமைகளுக்கென அவ்வப்போது பணியகம் அதிகாரம் வழங்குகின்ற வேறு கடமைகளுக்காகவும் பணியக நிதியை உபயோகிக்க இயலும். பணியகத்தின் கடன்பெறுவதற் கான அதிகாரம்.

(4) பணியகத்தின் ஆரம்ப மூலதனமாக இருபத்தைந்து இலட்சத்திற்கு குறையாத தொகை ஒன்று இருத்தல் வேண்டும். ஆரம்ப மூலதனத்தை நிதி விடயம் பொறுப்பான மாகாண சபை அமைச்சர் அவர்களால் விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களை விசாரித்து தீர்மானிக்கப்படும் தவணைகளாக மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியதோடு, அந்நிதியை மேலே (1) இன் உப பந்தியின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தில் வைப்பிடல் வேண்டும். பணியகத்தின் கடன்பெறும் அதிகாரி.

15. இந் நியதிச் சட்டத்தின் கடமைகளை நிறைவேற்றும் போது தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கென பணியகத்திற்கு தேவையான நிதியை அமைச்சர் அவர்களுடைய விருப்பத்தோடு அல்லது அவரால் வழங்கப்படும் பொதுவான அனுமதியின் நியமங்களுக்கு ஒத்திசைவாக காசோலையின் மூலம் அல்லது வேறொரு வகையில் பணியகத்தினால் தற்காலிக அடிப்படையில் கடன்பெற இயலும்.

அவ்வாறாயினும் பணியகத்தினால் இப்பிரிவின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தற்காலிக கடன் தொகைக்காக செலுத்த வேண்டியுள்ள மொத்த தொகையை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அமைச்சரவையின் நிதி விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களை விசாரித்து அவரால் உறுதி செய்யப்படும் அளவை மீறல் தகாது.

பணியக நிதி ஆண்டு மற்றும் கணக்காய்வு.

16. (1) பணியகத்தின் நிதி ஆண்டு ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி மாதம் முதலாம் திகதி முதல் அவ்வாண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையாதல் வேண்டும்.

(2) பணியகத்தின் வரவு, செலவு சொத்துக்கள் பொறுப்புக்கள், ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல் பணிகள் தொடர்பிலும் நூல்களை நடாத்தி செல்ல ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(3) அரச கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்புடைய அரசியல் யாப்பின் 154 ஆவது யாப்பு ஏற்பாடுகள் பணியகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்யும் பணிகளை ஒப்படைக்குமுன் அரசாங்கத்தினதும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களினதும் இணக்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்கு இணங்க பணியகத்தின் கணக்காய்வாளர் நாயகம் அவர்களினதும் பணிகள் ஏற்புடையதாக வேண்டும்.

## V ஆம் பகுதி

## பொதுவான ஏற்பாடுகள்

கட்டளைகளை தயாரிப்பதற்கான அதிகாரம் பணியகத்திற்கு உள்ளது.

17. (1) பணியகத்தின் கடமைகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான கட்டளைகளை தயாரிப்பதற்கும் இந் நியதிச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் அல்லது ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அல்லது கீழ் குறிப்பிடப்படும் சகல விடயங்கள் தொடர்பாக பணியகத்தினால் கட்டளைகள் தயாரிக்க இயலும்.

(அ) மூலதனத்தை முதலீடு செய்தல் சம்பந்தமாக ;

(ஆ) கடன்பெறுதல் மற்றும் அதற்கென நிபந்தனைகளை விதித்தல் சம்பந்தமாக ;

(இ) ஒப்பந்தங்களை தயாரித்தல், ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகளை உள்ளடக்கல் மற்றும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல் தொடர்பாக ;

(ஈ) நிதியமொன்றை தாபித்தல், அதற்காக வருமானம் சேகரித்தல், அவற்றுக்குத் தேவையான பங்குதாரர்களை பெறல், நிதியத்தின் நோக்கங்களை நிர்ணயித்தல் தொடர்பாக ;

(உ) நிதி முகாமைத்துவம் தொடர்பாக நிதி தத்துவங்களை வரையறை செய்தல் மற்றும் அதிகாரமளித்தல் ;

(ஊ) பணம் செலுத்துவதற்கான சட்டதிட்டங்களை விதித்தல் தொடர்பாக ;

(எ) சொத்துக்களின் நட்டம் தொடர்பானவை ;

(ஏ) பொருட்களை ஒதுக்குதல் மற்றும் ஏல விற்பனை தொடர்பாக ;

(ஐ) உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பாக

(ஒ) உள்ளக நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக.

(ஓ) ஊழியர் நியமனம், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல், இடைநிறுத்தம், சேவையிலிருந்து நீக்கம் ஆகியன தொடர்பாக,

(ஔ) கடமைகளுக்கான ஆலோசனைகளைப் பின்பற்றாமை, நிர்வாக சபையின் தீர்மானங்களையும் மற்றும் கட்டளைகளையும் நிறைவேற்றாத நபர்கள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ;

(க) சேவைகளை வழங்கும்போது அல்லது பெறும் போது விலை மனுக்களை (கூலி/கட்டணம்) தீர்மானித்தல் தொடர்பாக ;

(கா) கூட்டங்களுக்கான நடைமுறைகளைத் தீர்மானித்தல் தொடர்பாக ;

(கி) பேணவேண்டிய புத்தகங்கள், காலாண்டு அறிக்கைகள், ஆவணங்கள், முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பாக ;

(கீ) முரண்பாடுகளின் போது நடுவர்களை நியமித்தல் மற்றும் தீர்மானம் வழங்கும் காரியத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளைத் தீர்மானித்தல் ஆகியன தொடர்பாக;

(கு) மேல் மனுக்களைச் சமர்ப்பித்தல் விசாரணைகள் மற்றும் தீர்ப்புகளை அறிவித்தல் ஆகியன சம்பந்தமான கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளைத் தீர்மானித்தல் தொடர்பாக ;

(கூ) பணியகத்தின் நிர்வாகம், முகாமைத்துவம், அபிவிருத்தி, பயனுறுத்தன்மை மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக தேவையெனக் கருதும் வேறு அனைத்து காரணிகள் தொடர்பான நடைமுறை, நிபந்தனைகள் ஆகியன பற்றி தீர்மானம் மேற்கொள்ளுதல் ;

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பணியகத்தினால் தயாரிக்கப்படும் எந்தவொரு கட்டளைகளுக்கும் அமைச்சர் அவர்களின் அனுமதி பெறப்பட வேண்டும்.

(3) மேற்குறிப்பிடப்பட்ட (2) உப பிரிவின் கீழ் அமைச்சர் அவர்களால் அனுமதிக்கப்படும் கட்டளைகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்பு அதில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு கட்டளையும் இதில் விதிக்கப்பட்டதாக செல்லுபடியாதலும் வலுவுடையதாதலும் வேண்டும்.

காணிகளை சுவீகரித்தல்

18. (1) பணியக கடமைகளுக்காக ஏதேனும் நிலையான சொத்துக்களை உரித்தாக்கிக்கொள்ள தேவையான மற்றும் அமைச்சர் அவர்கள் உத்தேச சுவீகரிப்பை அங்கீகரிக்கும் சந்தர்ப்பத்தின் பொது உடமைகளை பொதுவான ஒரு கடமைக்காக தேவையான சொத்தாக கருதப்படவேண்டியதோடு அதன்படி காணிகளை சுவீகரித்துக்கொண்டு பணியகத்திடம் ஒப்படைக்க இயலும். அத்தகைய ஏதேனும் சுவீகாரத்துக்காக செலுத்த வேண்டிய பணத்தை பணியகம் செலுத்த வேண்டும்.

(2) ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனும் அரச காணியொன்றை பணியக கடமைகளுக்கு தேவை என கருதப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தில் II ஆவது பகுதியில் 1. 1.2 ஆம் பந்திக்கு இணங்க மாகாண சபைக்கு பொறுப்பேற்று மாகாண சபையால் பணிய தேவைக்காக பணியகத்திடம் ஒப்படைக்க வேண்டும். பணியகத்தினால் அக்காணியை குறித்த பணிகளுக்காக பயன்படுத்த வேண்டியதோடு, அக்கடமையுடன் ஏற்புடைய சட்டங்களுக்கும் நியதிச் சட்டங்களுக்கும் ஒத்திசைவாக அக்காணியை நிர்வகித்தல், பராமரித்தல் மற்றும் பயன்படுத்தல் ஆகியவற்றை பணியகம் மேற்கொள்ள வேண்டும்.

ஏதேனும் காணிக்குள் நுழைவதற்கான அதிகாரம்.

19. நிர்வாக குழுவின் தலைவரினால் அல்லது அவருடைய எழுத்துமூல ஆவணமொன்றினால் சாதாரணமாக அல்லது விசேடமாக அனுமதி வழங்கப்படும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதேனும் ஒரு காணியின் அல்லது ஓரிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு மூன்று நாட்களுக்கு முன் அறிவித்ததன் பின்னர் சம்பந்தப்பட்ட காணிக்குள் அல்லது அவ்விடத்திற்குள் நுழைதல், மற்றும் பணியக கடமைகளை அங்கு தொடர்தல் அல்லது ஏதேனும் விசாரணைகளை நடாத்துவதற்கு அல்லது வேறு கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியாயமான முறையில் இடம்பெறுவது சட்டபூர்வமானதாகும்.

20. இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் அல்லது தயாரிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றை, விதிமுறையொன்றை அல்லது ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ்வாறு செயற்படுவதை தவிர்க்கும் ஒவ்வொரு நபரும் இந் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவதுடன், நீதிவான் நீதியரசர் ஒருவர் முன்னால் நடாத்தப்படும் வழக்கு விசாரணையொன்றினால் குற்றவாளியாக்கப்பட்ட தருணத்தில் ஐயாயிரம் ரூபாவை மீறாத தண்டத்திற்கு அல்லது இரண்டு வருடத்திற்கு குறையாத கால சிறைத்தண்டனைக்கு அல்லது அவ்விரண்டு தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்படுதல் வேண்டும்.

சொல் அர்த்தம்.

21. சொற்கள் தொடர்பில் அர்த்தம் தேவைப்பட்டால் தவிர இந் நியதிச் சட்டத்தில் –

"மாகாண சபை" என்பதால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையையும்;

"ஆளுநர்" என்பதால், ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களையும்.

"அமைச்சர்" அவர்கள் என்பதால் ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் விடயப் பொறுப்பான அமைச்சர் அவர்களையும் ;

''விடயப்பொறுப்பான செயலாளர்'' என்பதால் ஊவா மாகாணத்தின் மாகாண சபையில் நிர்மாணத்துறை விடயப்பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்கள் அல்லது முறையாக தெரிவு செய்யப்பட்ட அப்பகுதியில் கடமைகளை நிறைவேற்றுகின்ற நபரையும் ;

''முதன்மைச் செயலாளர்'' என்பதால் ஊவா மாகாணத்தின் பிரதம செயலாளர் அவர்கள், முறையாக தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது அப்பதவியில் சேவையாற்றும் நபரையும் அறிமுகப்படுத்தப்படும் ;

''பணியக தலைவர்'' என்பதால், பணியக நிர்வாக குழுவின் தலைவர் அவர்களையும் ;

''மாகாண உள்ளூராட்சி நிர்வாகம்'' என்பது மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை அல்லது அத்தகைய சபையொன்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிறைவேற்றப்படுகின்ற அல்லது அதிகாரங்களுக்கு, கடமைகளுக்கு சமமான, சமனற்ற அதிகாரங்கள் கடமைகளை நடைமுறைப்படுத்தல் நிறைவேற்றாத ஏதேனும் ஒரு சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட தயாரிக்கப்படுகினற அதிகார சபையொன்றும்,

''அரச கூட்டுத்தாபனம்'' எனப்பதால், கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அன்றி வேறு ஏதேனும் எழுத்துமுல சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் அரசாங்கம் அல்லது மாகாண சபையினால் நன்கொடையாக அல்லது கடனாக அல்லது வேறு வகையில் மொத்த மூலதனம் அல்லது நிதியத்தின் ஒரு பகுதியோ அல்லது மூலதனத்தின் ஒரு பகுதியோ வழங்கப்படுகின்ற ஒரு கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறொரு நிறுவனம் என்று கருதப்படும்.

*சிங்கள மொழி சொல்வலுவாக கருத்திருத்தல் வேண்டும்.*

22. இந்நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஒவ்வாமை ஏற்பட்டால், சிங்கள மொழிச் சொல் அமுலில் இருக்கும் .

8- 123